



# Voice of Jagadguru


advaitam paramanandam — an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை




மனிதன் எப்பொழுதும் பகவானிடம் "உலகத்தில் எல்லோரும் சௌக்கியமாக இருக்கவேண்டும்" என்று ப்ரார்த்தனை செய்யவேண்டும். யார் மேலேயும் த்வேஷ பாவத்துடன் இருக்கக்கூடாது. பிறர் தனக்கு ஏதாவது தப்பு செய்தாலும், மன்னிக்கக்கூடிய மனப்பான்மை இருக்க வேண்டும். ப்ரதிஹிம்ஸை செய்யும் எண்ணம் ஒருநாளும் வரக்கூடாது. இதுதான் ஸத்புருஷனுடைய லக்ஷணம். யார் பிறருக்கு கஷ்டம் கொடுக்க விரும்புவானோ அக்கஷ்டம் அவனுக்கே தான் திரும்பவரும். சுவரில் எறிந்த பந்து, எறிந்தவன் மீதே திரும்பி விழுவதைப் போல்வரும்.

कन्दुकोभित्रिनिक्षिप्त इव प्रतिफलन्मुहुः । आपतत्यात्मनि प्रत्यो दोषोऽन्यस्य चिकीर्षतः ॥ கந்து3கோபி4த்ரிநிக்ஷிப்த இவ ப்ரதிப2லன்முஹுஃ । ஆபதத்யாத்மனி ப்ரத்யோ தோ3ஷோ(அ)ன்யஸ்ய சிகீர்ஷதஃ ||

இதைப்புரிந்து கொள்ளாமல் சிலர் பிறருக்கு எப்பொழுதும் கஷ்டங்களைக் கொடுக்க துணிந்து விடுவார்கள். யாராவது ஒரு நல்ல வார்த்தை சொல்லி நிறுத்தப் பார்த்தாலும் கேட்கமாட்டார்கள். துரியோதனன் யாருடைய நல்ல வார்த்தைகளையும் எடுத்துக் கொள்ளவில்லை. பாண்டவர்கள் மீது எல்லாவித துன்பங்களையும் கொடுத்து வந்தான். ஒரு நாளும் அவன் பண்ணின தவறுகளுக்கு பச்சாத்தாபமும் படவில்லை. மேலும் மேலும் செய்த கர்மங்கள் கடைசியில் அவனை அழித்துவிட்டது. ஆகையால் யாரும் பிறருக்கு தீங்கு நினைக்கக் கூடாது. அப்படி ஏதாவது தீங்கு செய்தாலும் உடனே மன்னிப்பு கேட்டு அந்தத் தவறு திரும்பவும் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். யார் ஒருவன் தவறுகளையும் செய்து, பச்சாத்தாபமும் படாமல், மேலுக்கு மேல் அதே தவறுகளை செய்து வருவானோ அவன் கர்மங்கள் அவனை ஆழம் தெரியாத குழியில் நள்ளிவிடும்.

यस्तु पूर्वकृतं पापमविमृश्यानुवर्तते ।अगाधपङ्के दुर्मैधा विषमे विनिपात्यते ।। யஸ்து பூர்வக்ரு'தம்' பாபமவிம்ருஶ்யானுவர்ததே .அகா3த4பங்கே து3ர்மைதா4 விஷமே விநிபாத்யதே ..


இதை நன்றாக புரிந்து கொண்டு நல்லபடியாக வாழ்க்கை நடத்த ஆசிர்வதிக்கிறோம்.
நன்றி - அம்மன் தரிசனம்



Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita




ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)


An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஷண்மதம் - ஆறு பிரிவுகள்

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)

### காணாபத்யம்

**25.** வர கணபதி



ஸிந்தூராபம் இபாநநம் த்ரிநயநம்

ஹஸ்தே ச பாஸங்குஸௌ

பிப்ராணம் மதுமத் கபாலம் அநிஸம்

ஸாத்விந்து மௌலிம் பஜே


புஷ்ட்யாஸ்லிஷ்டதநும் த்வஜாக்ர கரயா

பத்மோல்லஸத்தஸ்தயா

தத்யோந்யாஹித பாணிமாத்தவ வஸூமத்

பாத்ரோலஸத் புஷ்கரம்


செந்நிறத் திருமேனி, மூன்று கண்கள், பாசம், அங்குசம், தேன் கிண்ணம், கொடி உள்ள நான்கு கரங்கள், ஆகியவற்றுடன், சந்த்ரனைத் திருமுடியில் தரித்த வர கணபதியைத் துதிக்கிறேன். அவர் கொடியோடு கூடிய தாமரை உள்ள கரத்தால், தம் தேவியானவளைத் தழுவி நிற்பவர். செல்வம் நிரம்பிய மின்னலென ஒளிரும் பாத்திரத்தைத் துதிக்கையில் ஏந்தியவர்.



# Voice of Jagadguru

advaitam paramanandam


an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)


**26.** த்ரயாக்ஷர கணபதி



கஜேந்த்ரவதநம் ஸாக்ஷாச்
சலாகர்ண ஸுசாமரம்

ஹேமவர்ணம்
சதுர்பாஹூம்
பாஸாங்குஸதரம் வரம்

ஸ்வதந்தம் தக்ஷிணே
ஹஸ்தே ஸவ்யே
த்வாம்ரபலம் கதா

புஷ்கரே மோதகஞ்சைவ
தாரயந்தம் அநுஸ்மரேத்

யானை முகத்துடன், அசையும் காதுகளில் சாமரம் என்னும் அணிகள் மின்னும் பொன்னிற மேனியை உடையவரும், நான்கு திருக்கரங்களில் பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் ஆகியவற்றைத் தரித்தவரும், துதிக்கையில் மோதகம் தாங்கியருளுபவருமான த்ர்யாக்ஷர கணபதியைத் துதிக்கிறேன்.

(தொடரும்...)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

# தசமஹா வித்யா

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)

"சக்தி" என்று அழைக்கப்படும் அதே மஹாவித்யை விஷ்ணுவின் பத்து அவதாரங்களுக்கும் காரண சக்தியாக விலங்குகிறது. அவளே விஷ்ணு, அவனே தேவி; அவர்களுக்குள் எந்த வித்தியாசமும் இல்லை.

கதாசித் ஆத்யா லலிதா பும்ரூபா க்ருஷ்ண விக்ரஹா

கதாசித் ஆத்யா ஸ்ரீதாரா பும்ரூபா ராம விக்ரஹா

சின்னமஸ்தா ந்ருஸிம்ஹஸ்யாத் வாமனோ புவனேச்வரீ

ஜாமதக்ன்ய: காளிகாஸ்யாத் மீனோ தூமாவதீ பவேத்

பகளா கூர்மமூர்த்திஸ்யாத் பலபத்ரஸ்து பைரவி |


மஹாலாலக்ஷ்மி பவேத் பௌத்தி மாதங்கி கல்கி ரூபிணீ

இதன் காரணம் பற்றியே நமது புதுக்கோட்டை புவனேச்வரி பீடத்திலும் வாமன ஜயந்தியன்றே புவனேச்வரி ஜயந்தி கொண்டாடப்படுகிறது குறிப்பிடத்தக்கது.

மஹா சக்திகளின் தொடர்பு கொண்ட விஷயங்கள் கீழ்கண்டவாறு

| எண். | தசமஹா சக்திகள் | நவகிரகம் | தசாவதாரம் | நவதானியம் | ஆதார சக்கரம் |
|---|---|---|---|---|---|
| 1. | திரிபுரசுந்தரி | சூரியன் | ஸ்ரீ ராமர் | கோதுமை | சஹஸ்ராரம் |
| 2. | புவனேஸ்வரி | சந்திரன் | ஸ்ரீ கிருஷ்ணர் | அரிசி | அனாஹதா |
| 3. | பகளாமுகி | செவ்வாய் | நரசிம்மர் | துவரை | மணிப்பூரகம் |
| 4. | மாதங்கி | புதன் | பலராமர்(புத்தர்) | பாசிப்பயறு | விஷுத்தி |
| 5. | தாரா | குரு | வாமனர் | கொண்டைக்கடலை | ஆக்ஞா |
| 6. | கமலாத்மிகா | சுக்கிரன் | பரசுராமர் | மொச்சை | சுவாதிஷ்டானம் |
| 7. | காளி | சனி | கூர்மம் | எள்ளு | மூலாதாரம் |
| 8. | சின்னமஸ்தா | ராகு | வராஹம் | உளுந்து | இடாநாடி |
| 9. | தூமாவதி | கேது | மச்சம் | கொள்ளு | பிங்கள நாடி |
| 10. | திரிபுரபைரவி | லக்னம் | கல்கி | அனைத்தும் | ஷுஸ்மன நாடி |


இந்த பத்து பிரார்த்தனைகளையும் அகில உலகிற்கும் அன்னையான ஸ்ரீ புவனேச்வரி தேவி நிறைவேற்றி அருள் செய்யட்டும் !



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## நவராத்திரி

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)

வசந்த நவராத்ரியின் சிறப்பை விளக்கும் கதையைப் பார்போம்:



நாளடைவில் அழகிய யுவனாக வடிவெடுத்த சுதர்சனனைக் கண்ட காசி தேச அரண்மனை ஊழியர்கள் காசி தேச இளவரசியான சசிகலாவிற்கு நடக்கவிருக்கும் சுயம்வரத்தில் கலந்து கொள்ள அவனுக்கு அழைப்பு விடுகிறார்கள்.



அங்கு சென்ற சுதர்சனனை விரும்பி சசிகலா மாலை இடுகிறாள். அப்பொழுதுஅங்கு வருகை புரிந்திருந்த யுதாஜித் அதற்க்கு எதிர்ப்பு தெரிவிக்கிறான். தேவியின் துணையோடு யுதாஜித்தை எதிர்க்கிறான் சுதர்சனன். சுதர்சனனுக்கு உதவி புரியும் அம்பிகையை யுதாஜித் இழிவு படுத்த கோபம் கொண்ட தேவி அவனை சாம்பலாக்குகிறாள். பிறகு சுதர்சனனையும் சசிகலாவையும் வாழ்த்திய அம்பிகை தன்னை வசந்த நவராத்ரியில் முறைப்படி பூஜிக்கும்படி கட்டளை இடுகிறாள்.

சசிகலாவோடு பரத்வாஜரின் ஆஸ்ரமதிற்கு திரும்பிய சுதர்சனனை வாழ்த்தி கோசல நாட்டு அரசனாக முடி சூட்டுகிறார் பரத்வாஜர். பிறகு அரசனான சுதர்சன் தான் மனைவி சசிகலாவோடு விதிவத்தாக அம்பிகையை பூஜித்து சகல பாக்கியங்களும் பெற்று வாழ்ந்தான்.

இந்த நவராத்திரி ஸ்ரீராம நவமியுடன் முடியும் (நவராத்திரி நிர்ணயம் எனும் புத்தகத்தில், வசந்த நவராத்திரி 9 நாட்கள் கொண்டாடி னால் உலகம் க்ஷேமம் அடையும் என்றும் ஒரு பட்சம் அதாவது, 15 நாட்கள் (அமாவாசை முதல் பௌர்ணமி வரை) கொண்டாடினால் வேண்டும் வரங்கள் கிட்டும் என்றும் ஒரு மண்டலம், அதாவது, பங்குனி அமாவாசை முதல் சித்ரா பௌர்ணமி வரை 45 நாட்கள் கொண்டாடுவது சகல கார்யங்களிலும் வெற்றியைத் தரும் என்றும் கூறுகின்றது.

இந்த வசந்த நவராத்திரி வசந்த நவராத்திரி யோகம் எனும் பக்தி நிலையை தரக் கூடியது.வசந்த காலத்தில் பகல் பொழுது அதிகமாக இருப்பதால், வசந்த நவராத்திரி பூஜைகள் பகலிலேயே நடைபெறுகின்றன. வசந்த நவராத்திரியை லலிதா நவராத்திரி; என்றும் அழைப்பார்கள்.

(தொடரும்...)


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

# தேவி வழிபாடு

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த ஹாஸ்வாமிகள்)

ஸ்ரீ வித்யையின் ஶக்தி

மோக்ஷைக ஹேது வித்யா து ஸ்ரீவித்யா ஏவ ந ஸம்ஶய:
(ஸ்ரீ லலிதா த்ரிஶதி பூர்வ பாகம்)

மோட்சத்தை அடைய ஒரே கருவி ஸ்ரீவித்யா என்பதில் சந்தேகமே இல்லை. உபநிடதங்கள் கற்பித்தபடி ஸ்வய-நினைவு மூலம் பெறக் கூடிய விடுதலையை ஸ்ரீவித்யா மூலம் அனைவராலும் எளிதாகப் பெற முடியும். ஒன்று, ஸ்ரீவித்யா தீக்ஷை வழங்கப் பட்டவர், மிகவும் வெற்றி-கரமாக இருப்பார். இந்த உலகில் அமைதியுடனும் முழு-மையான செல்வத்துடனும் வாழ்வார். மற்ற உலகத்-திற்கான பாதையும் அவருக்கு காண்பிக்கப் படும்.

மந்திரம் என்பது பாராயணம்/ ஜபம் செய்பவர்களைப் பாதுகாக்கின்றது. மந்திரத்தின் முதன்மை தெய்வம் ஒரு ஆணாக இருந்தால் அது மந்த்ரம் என்று அழைக்கப் படுகின்றது, அது ஒரு பெண்ணாக இருந்தால் அது வித்யா என்று அழைக்கப் படுகின்றது.



ஸ்ரீவித்யா மந்த்ரம் மந்த்ரராஜா என்றும் அழைக்கப் படுகின்றது, அதாவது அனைத்து மந்திரங்களுக்கும் தலைவன்/ அரசன்.

பஞ்சதஶாக்ஷரீ/ ஸ்ரீவித்யா மந்த்ரம்

शिवः शक्तिः कामः क्षिति-रथ रविः शीतकिरणः
स्मरो हंसः शक्र-स्तदनु च परा-मार-हरयः |
अमी हृल्लेखाभि-स्तिसृभि-रवसानेषु घटिता
भजन्ते वर्णास्ते तव जननि नामावयवताम् ||

ஶிவ: ஶக்தி: காம: க்ஷிதி-ரத2 ரவி: ஶீதகிரண:
ஸ்மரோ ஹம்ஸ: ஶக்ர-ஸ்தத3னு ச பரா-மார-ஹரய: |
அமீ ஹ்ருல்லேகா2பி4-ஸ்திஸ்ருபி4-ரவஸானேஷு க4டிதா
ப4ஜந்தே வர்ணாஸ்தே தவ ஜனனி நாமாவயவதாம் ||
ஸௌந்தர்யலஹரீ 32-ஆவது ஶ்லோகம்

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

நம் அனைவருக்கும் தாயான அவளது வித்யா கீழ்கண்ட பீஜாக்ஷரங்களால் (விதை எழுத்துக்கள்) ஆனது –

சிவபெருமானுக்குரியது 'க',
ஶக்திக்குரியது 'ஏ',
மன்மதனுக்குரியது 'ஈ',
பூமிக்குரியது 'ல',
ஸூரியத்தேவனுக்குரியது 'ஹ்ரீம்',
குளிர்ந்த கிரணங்கள் கொண்ட சந்த்ரனுக்குரியது 'ஹ',
மீண்டும் மன்மதனுக்குரியது 'ஸ',
ஆகாஶத்திற்குரியது 'க',
தேவர்கள் அரசனான இந்த்ரனுக்குரியது 'ஹ',
மீண்டும் ஆகாஶத்திற்குரியது 'ல',
மீண்டும் இந்த்ரனுக்குரியது 'ஹ்ரீம்'.
பர எழுத்து 'ஸ'.
மீண்டும் மன்மதனுக்குது 'க',
விஷ்ணுவிற்குரியது 'ல',
இவற்றுடன் உன்னுடைய பீஜாக்ஷரமான 'ஹ்ரீம்' .



சேர்ந்து உன்னை வணங்குவதற்கான புனித மந்த்ரமாக மாறும்.

இந்த ஶ்லோகம் ஶ்ரீவித்யா மந்த்ரத்தின் சுருக்கத்தையும் அதன் அர்த்தத்தையும் தருகின்றது.

இந்த ஶ்ரீவித்யா மந்த்ரத்தில் 15 எழுத்துக்கள் உள்ளன. இது 3 குழுக்களாக உள்ளது. வாக்பவ என்று அழைக்கப் படும் முதல் குழுவில் 5 எழுத்துக்கள் உள்ளன. இது மந்த்ர வடிவத்தில் ஶ்ரீ தேவியின் தலை பகுதியாகும். பஞ்சதஶீ-யின் இரண்டாம் பகுதி மத்திய கூடம் அல்லது காமராஜ கூடம் என்று அழைக்கப் படுகின்றது. இதில் ஆறு எழுத்துக்-கள் உள்ளன. இது இடுப்புக்கு மேலேயும், ஶ்ரீ தேவியின் தலைக்கு கீழேயும் மந்த்ர வடிவத்தில் உள்ளது. பஞ்ச-தஶீயின் மூன்றாம் பாகத்தில் நான்கு எழுத்துக்கள் உள்ளன. இது மந்த்ர வடிவில் ஶ்ரீ தேவியின் இடுப்புக்கு கீழே உள்ள பகுதியை குறிக்கின்றது. (தொடரும்...)

# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)


## ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்

**3.**முதல் யாத்திரை

தானும் பீடாதிபத்யத்திற்கு தகுந்த தபோபலம் ஸம்பாதிக்க வேண்டுமென்ற ஊக்கம் ஏற்பட்டது.

சிருங்கேரிக்கு வந்து சேர்ந்து சில தினங்களுக்குள் மைஸூர் மஹாராஜா கிருஷ்ண ராஜ உடையாரவர்களின் ராணி ஸீதாவிலாஸ தேவராஜ அம்மணியவர்கள் அப்பொழுது மஹாராஜாவாக இருந்த தன் புத்திரன் சாமராஜ உடையாருக்கு இரண்டு ஸ்வாமிகளும் மைஸூர் விஜயம் செய்து அனுக்ரஹம் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டதின் பேரில் இருவரும் அப்படியே விஜயம் செய்து மஹாராணியின் மனோரதத்தை பூர்த்தி செய்துவிட்டு சிருங்கேரிக்கு திரும்பினார்கள்.


ஸ்ரீமகாஸ்வாமிகளும் அவர்கள் குருஸ்வாமிகளும்.

பால ஸ்வாமிகள் பெரியவருடன் யாத்திரையிலேயே பன்னிரண்டு வருஷ காலம் இருந்து விட்டபடியால் அவருடைய வித்யாப்யாஸம் பூராவும் யாத்திரா காலத்திலேயே ஏற்படும்படி ஸம்பவித்தது. தகுந்த வித்வான்களைக் கொண்டு வித்யாப்யாஸம் செய்து வைத்ததுடன், பெரிய ஸ்வாமிகள் அநேகமாய் தானே கவனித்து சாஸ்திரங்களையும் ஆசாரங்களையும் ஸம்பிரதாயங்களையும் போதித்து வந்தார். சின்னவருடைய சரீர ஸம்ரக்ஷணையிலும் மனப்பரிபாக விஷயத்திலும் பெரிய ஸ்வாமிகள் எடுத்துக்கொண்ட அக்கரைக்கு கணக்கேயில்லை. சிருங்கேரிக்கு வந்த பிற்பாடு ஸ்ரீமத் ஆசார்யாரவர்களே இவர்களுக்கு பிரஹ்ம ஸூத்ர பாஷ்யம் ஆரம்பம் முதல் கடைசி வரையில் சாந்தி புரஸ்ஸரமாக சொன்னதாகவும், யோக மார்க்கம் உபாஸனா மார்க்கம் இவைகளில் விசேஷ உபதேசங்கள் செய்ததாகவும் தெரிகிறது.

### 4. பீடாரோஹணம்

பெரிய ஸ்வாமிகளுக்கு வயது 82 ஆகும் ஸமயம் சரீரம் மிகவும் தளர்ந்து விட்டது. ஒரு நாள் கூட தவறாமல் தானே செய்து வந்த ஸ்ரீ சந்திர மௌலீசுவரர் பூஜையை சிஷ்ய ஸ்வாமிகளே செய்யும்படி ஏற்பட்டது. ஆனாலும் புத்திபலமோ

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

மனோதைர்யமோ கொஞ்சமேனும் குறையவில்லை. யோகத்தில் மிகவும் தேர்ச்சி யடைந்து எண்பது ஆஸனங்களுக்கு மேல் போடக்கூடியவர். மஹாராஜா கிருஷ்ணராஜ உடையார் எழுதிய அஷ்டோத்தர சத நாமாவளியில்

अष्टाङ्गयोगनिष्णातः அஷ்டாங்க$^{3}$யோக$^{3}$நிஷ்ணாத꞉ = (அஷ்டாங்க யோகத்தில் ஸித்தி பெற்றவர்).

अशीतिसंख्यदुस्साध्ययोगासनविशारदः
அஶீதிஸங்க்$^{2}$யது$^{3}$ஸ்ஸாத்$^{4}$யயோகா$^{3}$ஸனவிஶாரத$^{3}$꞉ = (ஸாதாரணமாக ஸாதிக்க முடியாத எண்பது யோகாஸனங்கள் போடுவதில் ஸமர்த்தர்) என்றும் விசேஷணங்கள் கொடுத்திருக்கிறார். இவ்வித மஹானுக்கு சரீரத்தில் பலம் குறைந்தாலும் மனோபலமாவது ஆத்ம சக்தியாவது குறையாமலே இருக்குமாதலால் பத்மாஸனம் முதலிய ஆஸனங்கள் போட்டுக் கொண்டு தியான ஸமாதியிலேயே இருந்து விடுவார்கள். அவ்விதம் அவர் சரீரத்தை மறந்திருந்த ஒரு ஸமயம் பக்கத்திலிருந்த சின்ன ஸ்வாமிகளுக்கு "ஆசார்யருடைய பாதாரவிந்தமே ஸகல விதமான சிரேயஸ்ஸுக்கும் காரணமல்லவா? அதைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொள்ள வேண்டும்" என்று மனதில் ஓர் எண்ணம் தோன்றிற்று. உடனே குருநாதருடைய யோக நிஷ்டையைக் கலைக்காமல் மிருதுவாக அவர்களுடைய பாதத்தைத் தன் கையினால் தொட்டுவிட்டார்.



உடனே குருநாதர் தன் பாதத்தை இழுத்துக்கொண்டு "என்ன செய்தாய்?" என்று அதட்டினார்கள். சின்ன ஸ்வாமிகள் தனக்கு ஏற்பட்ட மனோவிருத்தியை சொல்லிவிட்டு அபசாரமாயிருந்தால் மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டார். அதற்கு ஸ்ரீமத ஆசார்யார் "ஆமாம். அபசாரம்தான். நீ தொட்டால் எனக்கு நெருப்பு மாதிரி சுடுகிறது. இனிமேல் தொடாதே" என்றார்கள். இதிலிருந்து சின்னவரிடம் அதற்குள் எவ்வளவு தபோ மஹிமை ஏற்பட்டிருந்த தென்றும், அவரிடம் பெரியவர் எவ்வளவு கௌரவ புத்தி வைத்திருந்தாரென்றும் புலப்படுகிறது.

(தொடரும்…)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## श्रीमन्नारायणीयम्

## ஸ்ரீமந்நாராயணீயம்

**(दशकम्) - தசகம் 3**

भक्ति - प्रार्थना

பக்தி - ப்ரார்த்தனா பக்தியை வேண்டுதல்

पठन्तो नामानि प्रमदभर सिन्धौ निपतिता
स्मरन्तो रूपं ते वरद! कथयन्तो गुण-कथा ।
चरन्तो ये भक्त स्त्वयि खलु रमन्ते परममू-
नहं धन्यान्मन्ये समधिगत-सर्वाभिलषितान् ||1||

படந்தோ நாமானி ப்ரமத³ப⁴ர ஸிந்தௌ⁴ நிபதிதா
ஸ்மரந்தோ ரூபம்' தே வரத³! கத²யந்தோ கு³ண-கதா² .
சரந்தோ யே ப⁴க்த ஸ்த்வயி க²லு ரமந்தே பரமமூ-
நஹம்' த⁴ன்யான்மன்யே ஸமதி⁴க³த-ஸர்வாபி⁴லஷிதான் ||1||



வரதனே! பக்தர்கள் உன் திருப்பெயர்களைப் பாடுகிறார்கள், உன் வடிவத்தைத் தியானிக்கின்றார்கள்; ஆனந்தக் கடலில் மூழ்கி உன் குணங்களையும் கதைகளையும், சொல்கின்றார்கள்; இவ்வாறெல்லாம் இருந்து கொண்டு உன்னிடத்திலேயே இன்புறுகிறார்கள். விரும்பியவற்றை எல்லாம். அடைந்திருக்கின்ற அந்தப் பக்தர்களையே நான் பேறு பெற்றவர்களாகக் கருதுகின்றேன்.

गदक्लिष्टं कष्टं तव चरणसेवारस भरे
ऽप्यनासक्तं चित्तं भवति बत विष्णो! कुरु दयाम् ।
भवत्पादांभोज-स्मरण-रसिको नामनिवहा-
नहं गायं गायं कुहचन विवत्स्यामि विजने ||2||

க³த³க்லிஷ்டம்' கஷ்டம்' தவ சரணஸேவாரஸ ப⁴ரே
(அ)ப்யனாஸக்தம்' சித்தம்' ப⁴வதி ப³த விஷ்ணோ! குரு த³யாம் .
ப⁴வத்பாதா³ம்போ⁴ஜ-ஸ்மரண-ரஸிகோ நாமனிவஹா-
நஹம்' கா³யம்' கா³யம்' குஹசன விவத்ஸ்யாமி விஜனே ||2||


## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

விஷ்ணுவே! நோய்களால் துன்புற்ற ( என்) மனம் உன் திருவடிகளை வணங்குவதால் உண்டாகின்ற ஆனந்தப் பெருக்கிலும் கூடப் பற்று இருக்கிறது. ஐயோ, இஃது பெருந் துன்பமே ஆகும். நான் உன் திருவடிகளைத் தியானிப்பதில் ஆசை உடையவனாய், உன் திருப்பெயர்களைப் பாடிக் கொண்டு எங்கேயாவது தனியான ஓரிடத்தில் வாழ விரும்புகின்றேன். அதற்கு நீயே அருள் புரிய வேண்டும்.

कृपा ते जाता चेत्कि मिव न हि लभ्यं तनुभृतां
मदीय क्लेशौघ प्रशमनदशा नाम कियती।
न के के लोकेऽस्मिन्न निशमयि शोकाभिरहिताः
भवद्भक्ता मुक्ताः सुखगति मसक्ता विदधते **||3||**


க்ரு’பா தே ஜாதா சேத்கி மிவ ந ஹி லப்⁴யம்’ தனுப்⁴ரு’தாம்’
மதீ³ய க்லேஶௌக⁴ ப்ரஶமனத³ஶா நாம கியதீ.
ந கே கே லோகே(அ)ஸ்மின்ன நிஶமயி ஶோகாபி⁴ரஹிதாঃ
ப⁴வத்³ப⁴க்தா முக்தாঃ ஸுக²க³தி மஸக்தா வித³த⁴தே
**||3||**



இறைவனே! உன் அருள் உண்டானால், உடலை அடைந்தவர்களால் அடைய முடியாதது என்னதான் உள்ளது? என் துன்பங்களின் தொகுதியை அழிப்பதாகிய நிலைமை உனக்கு அரிதன்று. இவ்வுலகில் உன் பக்தர்களில் எத்தனை பேர்கள் எப்பொழுதும் துன்பம் இல்லாதவர்களாயும், முக்தர்களாயும், பற்று அற்றவர்களாயும் இன்ப நிலையை அடைகின்றார்கள்?


मुनि प्रौढा रूढा जगति खलु गूढात्मगतयो
भवत्पादां भोजस्मरण विरुजो नारदमुखाः ।
चरन्तीश स्वैरं सतत-परि-निर्भात-परचि-
त्सदानन्दाद्वैत प्रसर परिमग्नाः किमपरम् **||4||**

முனி ப்ரௌடா⁴ ரூடா⁴ ஜக³தி க²லு கூ³டா⁴த்மக³தயோ
ப⁴வத்பாதா³ம்’ போ⁴ஜஸ்மரண விருஜோ நாரத³முகா²ঃ
.
சரந்தீஶ ஸ்வைரம்’ ஸதத-பரி-நிர்பா⁴த-பரசி-
த்ஸதா³னந்தா³த்³வைத ப்ரஸர பரிமக்³னாঃ கிம பரம்
**||4||**



# Voice of Jagadguru

advaitam paramanandam an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஈசனே நாரதர் முதலிய முனிவர்கள் உலகில் புகழ்பெற்றவர்கள். அறிய முடியாத ஆன்ம அறிவை உடையவர்கள்; உன் திருவடித்தாமரை மலர்களைத் தியானிப்பதால் துன்பத்தை ஒழித்தவர்கள். எப்பொழுதும் விளங்குகின்ற ஸச்சிதானந்த வடிவமான ஒப்பற்ற வெள்ளத்தில் மூழ்கி உள்ளார்கள்; அதனால் அன்றோ அவர்கள் தங்கள் விருப்பம்போல் சென்று கொண்டு இருக்கின்றார்கள். அதற்கும் மிகுதியாக அவர்களுக்கு வேடியது என்ன உள்ளது?



भवद्भक्तिः स्फीता भवतु मम सैव प्रशमये-
दशेषक्ले शौघं न खलु हृदि सन्देह कणिका ।
न चेद्व्यासस्योक्तिस्तव च वचनं नैगमवचो
भवेन्मिथ्या रथ्या पुरुष वचन-प्रायमखिलम् **||5||**

ப$^4$வத்$^3$ப$^4$க்தி: ஸ்பீ$^2$தா ப$^4$வது மம ஸைவ ப்ரஶமயே-
த$^3$ஶேஷக்லே ஶௌக$^4$ம்’ ந க$^2$லு ஹ்ரு’தி$^3$
ஸந்தே$^3$ஹ கணிகா .
ந சேத்$^3$வ்யாஸஸ்யோக்திஸ்தவ ச வசனம்’
நைக$^3$மவசோ
ப$^4$வேன்மித்$^2$யா ரத்$^2$யா புருஷ வசன-ப்ராயமகி$^2$லம்
**||5||**

எனக்கு உன்னிடத்தில் உள்ள பக்தி முழுமையாகவே இருக்க வேண்டும். அதுதான் எல்லாத் துன்பங்களையும் அடியோடு அழிக்கவல்லது; இதுபற்றிச் சிறிதளவு ஐயமும் என் மனதில் இல்லை. அப்படி இல்லையென்றால், வியாஸரின் சொல்லும், உன் மொழியும் வேதங்களின் சொல் தொடரும் ஆகிய எல்லாம் தெருவில் திரிகின்ற பாமர மக்களின் பேச்சினைப் போல் பொய்யாகவே இருக்கும்.

Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்